பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 மாசி 23 வியாழக்கிழமை (06-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 99

# இடைக்கால நிர்வாக சபை விரைவில் அமைக்க முடிவு?

## சகல கட்சிகளுக்கும் இடமளிக்கப்படுமாம்

கொழும்பு, மார்ச் 6

**வடக்கு - கிழக்கில் உள்ள சகல கட்சிகளும் மற்றும் நாட்டில் உள்ள முக்கிய கட்சிகளும் இடம்பெறும் வகையில் வடக்கு - கிழக்கு நிர்வாக சபையை விரைவில் அமைப்பதற்கு அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகின்றது.**

இந்த இடைக்கால நிர்வாக சபையை ஜனாதிபதி அரசமைப்பின் கீழ் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அல்லது அவசர காலச் சட்ட விதிகளைப் பயன்படுத்தி ஏற்படுத்துவார் என்று அரசாங்க வட்டாரங்களை மேற்கோள் காட்டி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி




அப்ப பறக்கிறத்துக்குத் தான் எண்டால் ...... சும்மா தரையில நிக்கிறது பாடும் இப்படியாய்க் கிடக்குப் பாருங்கோ......!

## பயணிகள் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 6

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று பயணிகள் கப்பல் சேவை நடைபெறவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

சிவில் அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 540 க்கு உட்பட்டவர்களை இன்று காலை

( 8ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் வங்கிப் பாதுகாப்புக்கு நின்ற பொலீஸார் சூட்டுக்குப் பலி!

### அவரது ஆயுதமும் அபகரிப்பு

கொழும்பு, மார்ச் 6

வாழைச்சேனை மக்கள் வங்கிக் கிளையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது துப்பாக்கியும் அபகரித்துச் செல்லப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மகா சிவராத்திரியையொட்டி நாளை ஊரடங்கு இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 6

மகாசிவராத்திரி தினத்தையொட்டி நாளை வெள்ளிக்கிழமை யாழ். குடாநாட்டில் இரவு நேர ஊரடங்கு நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி பலாலி வானொலி நேற்றிரவு அறிவித்தது.

மகாசிவராத்திரி தினத்தன்று இரவு நேர ஊரடங்கை நீக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையையடுத்து நாளை ஊரடங்கு நீக்கப்படும் என்று 51ஆவது படையணியின் கட்டளைஅதிகாரி மேஜர் ஜெனரல் பலகல்ல ஏற்கனவே தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

மகாசிவராத்திரியை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை இந்துக்களுக்கு விடுமுறைதினமாக அரசு அறிவித்துள்ளது தெரிந்ததே. (இ-3-4)

# ஆயுதம் ஒப்படைக்க தமிழ்கட்சிகள் மறுப்பு!

கொழும்பு, மார்ச் 6

விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்கள் களையப்படும் வரை தமக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஆயுதங்களை ஒப்படைப்பதில்லை என தமிழ்க் கட்சிகள் முடிவெடுத்துள்ளன என ''ஞாயிறு லங்காதீப'' சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது.

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் காரணமாகவே தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன என்றும் —

அவை பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் வழங்கப்பட்டுள்ளதால் அதில் எதுவித ஒளிவு மறைவும் இல்லை எனவும் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் 'ஞாயிறு லங்கா தீபவுக்கு' தெரிவித்துள்ளனர்.

அண்மையில் இரத்தினபுரி மாவட்டத்தில் இடம்பெற்ற வன்செயல்களை அடுத்து அரசியல் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் வழங்கப்பட்ட ஆயுதங்களை மீளப்பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவருவது தெரிந்ததே.

தற்போது தெற்கில் உருவாகியுள்ள நிலைமையை வடபகுதியில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்குத் தோன்றியுள்ள அச்சுறுத்தலுடன் ஒப்பிடமுடியாதென தமிழ்கட்சிகளின் தலைவர்களில் ஒருவர் தெரிவித்துள்ளார். (10)

## குமாரின் வீட்டுக்கோயில் இனந்தெரியாதோரால் உடைப்பு

கொழும்பு, மார்ச் 6

தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் கொழும்பு இல்ல வளவில் குடும்ப வழிபாட்டுக்காக அமைக்கப்பட்டுள்ள கோயில் கடந்த செவ்வாய் இரவு இனந்தெரியாத சிலரால் உடைக்கப்பட்டது.

''இந்தச் சம்பவத்தைப் புரிந்தவர்கள் கடவுளுடன் விளையாடுகிறார்கள்; அவர்கள் கடவுளில் கை வைத்துள்ளனர். இதனை நினைக்கும் போது மிகவும் கவலை தருகிறது'' என குமார் பொன்னம்பலம் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

''இந்தச் சம்பவத்தை யார் புரிந்தார்கள் எனக் கூற

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். அகதிகளை ஏற்றிவந்த பஸ் விபத்தில் சிக்கியது!

### ஒருவர் பலி; 29 பேர் காயம்

கொழும்பு, மார்ச் 6

யாழ்ப்பாணம் வருவதற்காக வவுனியாவில் இருந்து திருகோணமலை சென்ற அகதிகளின் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் கொல்லப்பட்டார்; 29 பேர் காயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் ஹொறவப் பொத்தானையில் இச் சம்பவம் இடம் பெற்றது.

காயமடைந்தவர்கள் ஹொரவப் பொத்தானை, அநுராதபுரம் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்குள்ளான பஸ்ஸில் 61 பயணிகள் இருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ- 3- 4)

## றெலோவை ஆதரிப்பது என்று கூட்டணி முடிவு எடுக்கவில்லை

### சிவசிதம்பரம் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 6

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் ரெலோ குழுவை ஆதரிப்பது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவெடுத்திருப்பதாக வெளியான செய்திகள் தவறானவை.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் எம். சிவசிதம்பரம் இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

'உள்ளூராட்சித் தேர்தலில் ரெலோவுக்கு கூட்டணி ஆதரவு' என்ற தலைப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உதயனின் முன்பக்கத்தில் வெளியான செய்தி தொடர்பாகவே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ரெலோ அமைப்புப் பிரதி நிதிகளுக்கும் இடையில் கடந்த 26 ஆம் திகதி சந்திப்பு நடந்ததாக அச்செய்தியில் குறிப்பிட்டிருப்பது சரியானது என்றார் அவர்.

''அச் சந்திப்பின் போது தனது வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்குமாறு ரெலோ கோரியது. அவர்களது கோரிக்கையை செவிமடுத்தோம். அது குறித்து பரிசீலித்து, முடிவு செய்து,

(8 ஆம் பக்கம் பார்க்க)

# நிறுத்தப்பட்டிருந்த ஹெலி மீது தரை இறங்கிய ஹெலி மோதியது

### விபத்து சம்பவம் குறித்து மேலும் தகவல்

கொழும்பு, மார்ச் 6

விமானப்படையின் இரு எம். ஐ. 17 ரகஹெலிக்கொப்டர்கள் மோதிய சம்பவம் கடந்த திங்களன்று அநுராதபுரத்திலேயே இடம் பெற்றதாகத் தற்பொழுது தெரிவிக்கப்படுகிறது.

அநுராதபுரத்திலுள்ள விமான நிலையத்தில் தரை இறங்கிய ஹெலி ஒன்று அங்கு ஏற்கனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றொரு ஹெலியுடன் மோதியது.

இந்தச் சம்பவத்தையடுத்து வடக்குக்கான படையினரின் விநியோக, போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்[illegible] என்று பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எம். ஐ. 17 ரக ஹெலிகள் ஒரு தடவையில் 40 பேரை ஏற்றிச் செல்லக் கூடியவை ஆகும்.

[illegible]

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உக்கிரைன் விமானக் கம்பனியின்

# அறிக்கை கிடைத்த பின்பே 'அன்ரனோவ்' சேவையில்!

கொழும்பு, மார்ச்

உக்கிரைன் நாட்டு விமானக் கம்பனியின் அறிக்கை கிடைக்கும் வரை 'அன்ரனோவ் 32' ரக விமானங்களை சேவையில் ஈடுபடுத்துவதில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது.

விமானப்படை வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'த ஐலண்ட' மேற்கண்டவாறு செய்தி வெளியிட்டுள்ளது.

இரத்மலானை விமான நிலையத்தில் 'அன்ரனோவ் 32' ரக விமானம் விபத்துக்கு உள்ளாகி நொறுங்கியதையடுத்து விமானப் படையினரிடம் மீதமாக உள்ள மூன்று 'அன்ரனோவ் 32' ரக விமானங்களையும் சேவையில் ஈடுபடுத்துவது நிறுத்தப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான விமானத்தின் கறுப்புப் பெட்டி உக்கிரைனில் உள்ள பிரஸ்தாப விமான நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும்—

விபத்துத் தொடர்பான அறிக்கை கிடைத்த பின்பே மீதம் உள்ள அன்ரனோவ் விமானங்களை சேவையில் ஈடுபடுத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் —விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்ததாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது. (இ-3-150)

## வாழ்த்துகின்றோம்

**புத்தூர்**

**யா/ ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில்**

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்ற மாணவர்களைத் தமிழ்ச்சங்கம் சார்பாக மேன்மேலும் பற்பல வளம்பெற வாழ்த்துகின்றோம்.

**கலைப்பிரிவு:**

| | | | |
|---|---|---|---|
| ஞானசசி தியாகராஜா | 3 ஏ | பி | |
| (யாழ். மாவட்டத்தில் 1 ஆம் இடம்) | | | |
| நிருபா பாலச்சந்திரன் | 2 ஏ | 2 பி | |
| (யாழ். மாவட்டத்தில் 29 ஆம் இடம்) | | | |
| கல்யாணி நவரத்தினம் | | 4 பி | |
| மகாலிங்கம் பவானந்தன் | ஏ | பி | 2 சி |
| மஞ்சுளா சுப்பிரமணியம் | ஏ | 2 பி | எஸ் |
| ஜெயரூபன் சின்னத்துரை | | 3 பி | சி |

**வர்த்தகப் பிரிவு:**

| | | | |
|---|---|---|---|
| நடராஜா சிவதாசன் | 2 ஏ | 2 பி | |
| (யாழ். மாவட்டத்தில் 37 ஆம் இடம்) | | | |
| தர்மினி குமாரசாமி | 2 ஏ | | 2 சி |
| அரியரட்ணராஜா தர்ஷன் | ஏ | | 3 சி |

வாழ்த்துவோர்:

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

(சி/249)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லப்பா இரத்தினம்

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் வேலங்குளத்தைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லப்பா இரத்தினம் அவர்கள் 02-03-1997 இல் வேலங்குளத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பாவின் (மயிலிட்டிப் பிள்ளையார்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி இராசம்மாவின் அன்புச் சகோதரியும், சண்முகநாதன், தியாகராஜா, சிவரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், பராசக்தி, உலகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜேந்திரன், ஜெயேந்திரன், நிவாசினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வேலங்குளத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சுப்பிரமணியம்
(ஆச்சாரி)

அம்மன் வீதி,
திருநெல்வேலி,

(45658)

### திருமதி உதயசுந்தரி சின்னத்தம்பிப் பத்தர் (சுந்தரி)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணை, காரைக்காட்டு ஒழுங்கையை வதிவிடமாகவும்கொண்ட திருமதி உதயசுந்தரி 01– 03- 97அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பிப் பத்தரின் மனைவியும், லதா, வனிதா, குமுதா, குணசீலன், உதயசீலன், தனசீலன் ஆகியோரின் தாயாரும், தவநாதன் (தவம்), மகேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும், சரணியா சரோன், பானுஜா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
சி. தவநாதன்
(தவம்)

77, காரைக்காட்டு ஒழுங்கை,
வண்ணார் பண்ணை.

(45660)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடத்தினரின் கலைவார நிகழ்வின் தடகள விளையாட்டு நிகழ்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமையும், ஞாயிற்றுக் கிழமையும் காலை 9 மணி முதல் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும். (இ-4)

★ ★ ★

கலட்டி மெ.மி.த க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 10 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் நடைபெறும். (இ-3)

## விபத்தில் பெண் பலி

யாழ்ப்பாணம் வருவதற்காக வன்னியில் இருந்து வ்வுனியாவுக்குச் சென்ற பெண் ஒருவர் அங்கு இடம்பெற்ற வீதி விபத்தில் உயிரிழந்தார்.

புலோப்பளையைச்சேர்ந்த நாகேந்திரம் கிருஷ்ணலீலா (வயது 40) என்ற குடும்பப் பெண்ணே மரணமானவராவர். விபத்துக்கான காரணம் தெரியவரவில்லை. (ஐ-117)


## மலிவுவிலையில் வெற்றிலை

யாழ்ப்பாண மக்களின் நாளாந்த தேவையைப் பூர்த்தி செய்யும்முகமாக மலிவு விலையில் வெற்றிலை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**சிவகுமார் ஸ்ரோர்ஸ்**
**282, ஆஸ்பத்திரி வீதி,**
**சத்திரச்சந்தி,**
யாழ்ப்பாணம்.

(45662)

## யூனிவேர்சல்

**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**96 A/L**
**DAY CLASS**
(PAPER CLASS)

பொருளியல்:
திரு, கருணாகரன்
கணக்கியல்:
திரு. பாலவாசன்
வர்த்தகம்:
திரு. உதயமோகன்
அளவையியல்:
திரு. யுகபாலசிங்கம்
இந்துநாகரிகம்,
இந்துசமயம்:
திரு. சிவ. மகாலிங்கம்
தமிழ்:
திரு. தங்கராஜா

**ஆரம்பம்: 07-03-97**
[illegible]

(45663)


யாழ். மாவட்ட

## ப. நோ. கூ. சங்கங்களுக்கு ரூபா $2\frac{1}{2}$ கோடி வங்கிக் கடன்

யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களுக்கு இரண்டு கோடி 50 லட்சம் ரூபாவை மக்கள் வங்கி குறைந்த வட்டியில் க'_னாக வழங்கவுள்ளது.

இதற்கான பணிப்புரையை ஜனாதிபதி மக்கள் வங்கிக்கு விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்கள் கொழும்பில் இருந்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வந்து விநியோகிக்க முடியாத அளவுக்கு அந்தச் சங்கங்கள் நிதி நெருக்கடியில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்தே இந்தச் சங்கங்களுக்கு மக்கள் வங்கி மூலம் கடன் வழங்க ஏற்பாடாகியுள்ளது. (இ-4)

## வாழைச்சேனை நகருக்குள் வாகனங்கள் செல்லத் தடை

### பயணிகள் ஒரு மைல் நடக்கின்றனர்

கொழும்பு, மார்ச் 6

மட்டக்களப்பில் இருந்து வாழைச்சேனைக்கு செல்லும் வாகனங்கள் அனைத்தும் பாதுகாப்புக் காரணங்களுக்காக வாழைச்சேனை நகருக்குள் செல்லத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் இருந்து செல்லும் வாகனங்கள் வாழைச்சேனை நகருக்கு ஒரு மைல் தொலைவில் உள்ள உதவிப்பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கு அருகில் வைத்து நிறுத்தப்படுகின்றன. பயணிகள் மட்டும் நகருக்குள் நடந்து செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். (ஐ)

## சம்பளத்தை வழங்க பணிப்பு

குருநகர், மார்ச் 6

வவுனியா, மன்னார், கிளிநொச்சியிலுள்ள பாடசாலைகளில் கற்பித்து யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளில் தற்காலிகமாகக் கடமையாற்றும் ஆறு ஆசிரியர்களின் கொடுபடாத சம்பளத்தை உடனடியாக வழங்குமாறு யாழ். வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசா யாழ். கல்வி வலய அலகு 1 இன் பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார்.

மேற்கூறிய ஆறு ஆசிரியர்களும் வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு செய்த முறைப்பாட்டை அடுத்து போக்குவரத்துச் சீரடையும் வரை யாழ்ப்பாணத்தில் இவர்கள் தற்காலிக கடமையாற்ற மாகாண கல்விப் பணிப்பாளர் அனுமதி வழங்கியுள்ளார். (இ-51)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 6

நவாலி சென். பீற்றர்ஸ் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்த நான்கு மாணவர்களையும் பாராட்டும் வைபவம் அண்மையில் அங்கு நடைபெற்றது. (ஐ-15)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, மார்ச் 6

நல்லூர் சிவன் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 3-30 மணிக்கு பிரதோஷ விரத விசேட அபிஷேகம், பூசைவழிபாடுகள் இடம் பெறும். (ஐ-30)

★ ★ ★

வடமராட்சி, மார்ச் 6

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய சுற்றாடலில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை ''விவேகானந்தரும் ஏழைகளும்'' என்ற தலைப்பில் சுவாமி சித்ரூபானந்தா உரையாற்றுவார். (ஐ-173)

★ ★ ★

பளை நரசிம்ம வைரவர் ஆலயத்தில் சடந்த பெப்ரவரி மாதம் ஆரம்பமான அந்தரீதசம்புரோக்ஷண பூர்த்தியை ஒட்டி இன்று வியாழக்கிழமை நவககிரக ஹோமமும், நாளை விசேட சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளன. (ஐ-117)

## யாழ். நீர்வளச்சபை அலுவலகத்தை மீண்டும் இயங்க வைக்க முயற்சி

யாழ். நகரில் உள்ள நீர்வளச் சபையின் பிராந்திய அலுவலகம் கடந்தயுத்தகால அனர்த்தங்களின் காரணமாக செயற்பாடுகள் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளன.

1990 ஆம் ஆண்டின் பின் இச் சபைக்குச் சொந்தமான பல கோ: ரூபா பெறுமதிமிக்க உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் சொத்துகள் பல தடவைகள் அபகரிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நீர்வளச்சபை கடந்த 1990 ஆம் ஆண்டுக்கு முன்பு யாழ். மாவட்டத்திலும் கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும் வரண்ட பகுதிகளில் குழாய்க் கிணறுகள் அமைத்தல், மண் பரிசோதனை செய்துஎங்கு நல்ல தண்ணீர், எங்கு உப்புத்தண்ணீர் உள்ளது என்பதை கண்டறிதல்; கிணறு எங்கு தோண்டினால் நல்ல தண்ணீர் வரும் என்பதை ஆய்வு செய்து தெரிவித்தல் போன்ற மிகவும் அவசியமான— குறிப்பாக விவசாயிகளுக்கு நன்மை தரும் பல் வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தது.

முழங்காவில் பகுதியில் குடியேற்றத் திட்ட மக்களுக்கு நீர்ப்பாசன விடயத்தில் முக்கிய உதவிகளையும் செய்து வந்தது.

பின்னர் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களை அடுத்தும் பொருள்கள் இயந்திர சாதனங்கள் திருடப்பட்டதை அடுத்தும் இச் சபையின் செயற்பாடுகள் யாவும் மிகவும் பாதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

யாழ். பல்கலைக்கழகத்தில் புவியியல் பிரிவில் கற்கும் மாணவர்களுக்கும் இச் சபையின் யாழ். பிராந்திய அலுவலகம் ஆய்வு வேலைகளில் பல்வேறு உதவிகளை வழங்கி வந்தது.

பணிகள் பாதிக்கப்பட்டதால் இங்கு பணியாற்றிய தொழில் நுட்பவியலாளர்கள் பலர் நாட்டின் வேறு பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சபையை மீண்டும் செயற்படச் செய்வதற்கான முன்னேற்பாடுகள் பற்றி பேச்சு நடத்த இங்கிருந்து அதிகாரி ஒருவர் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார். (ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கிழக்கு ஜெருஸலேமில் அமைந்துள்ள

# பலஸ்தீன அலுவலகங்களை மூட இஸ்ரேல் பிரதமர் அவசர உத்தரவு!

## 48 மணிநேர அவகாசம் விதிப்பு!!

ஜெருஸலேம், மார்ச் 6

கிழக்கு ஜெருஸலேமில் அமைந்துள்ள நான்கு பலஸ்தீன அலுவலகங்களையும் 48 மணிநேரத்துக்குள் மூடிவிடுமாறு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகு உத்தரவிட்டுள்ளார்.

தாமாகவே இந்த அலுவலகங்களை மூட பலஸ்தீனியர்கள் தவறினால் அவற்றை மூட பொலீஸ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

கிழக்கு ஜெருஸலேமில் இஸ்ரேல் அமைத்துவரும் குடியிருப்புத் திட்டத்தினால் எழுந்துள்ள பதற்ற நிலையை இஸ்ரேல் பிரதமரின் இந்த அறிவிப்பு மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

இஸ்ரேல் பிரதமரின் எதிரும் புதிருமான இந்நடவடிக்கைகளினால் மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகி வருகிறது.

யூதர்களுக்கு குடியிருப்புத் திட்டங்களை அமைக்கும் இஸ்ரேலின் தீர்மானங்களை அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் உட்பட பல உலகத் தலைவர்கள் கண்டித்துள்ளனர்.

1967 ஆம் ஆண்டு மத்திய கிழக்கு யுத்தத்தின் போது இஸ்ரேல் கிழக்கு ஜெருஸலேமைக் கைப்பற்றி அதன் தலைநகரமாகவும் அமைத்துக்கொண்டது. ஆனால் பலஸ்தீனம் ஜெருஸலேமை தனது எதிர்காலத் தலைநகரமாக்கத் திட்டமிட்டுள்ளது.

(ஐ-10)

# உயிரணுவில் இருந்து மனிதனை உருவாக்கும் ஆராய்ச்சிக்கு தடை

வாஷிங்டன், மார்ச் 6

உயிரணுவில் இருந்து மனிதர்களை உருவாக்குவது பற்றிய ஆராய்ச்சிக்கு அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் தடை விதித்துள்ளார்.

அத்துறையில் பணியாற்றும் விஞ்ஞானிகள் சொந்தக் கட்டுப்பாடுகளை விதித்துக் கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மனிதப் படைப்பை பாதிக்கும் எந்த ஆராய்ச்சியும் அறிவியல் சம்பந்தப்பட்டது மட்டுமல்ல என்றும் —

அது ஒழுக்க நெறியுடனும் ஆன்மிக நெறியுடனும் தொடர்பானது எனவும் கிளின்டன் தெரிவித்துள்ளார்.

(ஐ-10)

## பிங்கின் இறுதிக்கால துயரம்

ரொக்கியோ, மார்ச் 6

1989 ஆம்ஆண்டு சீனாவில் தியனன்மென் சதுக்கத்தில் மாணவர்கள் மேற்கொண்ட ஜனநாயகம் போராட்டத்தை இராணுவ நடவடிக்கையின் மூலம் நசுக்கிய டெங்ஷியாஓபிங் தனது இறுதிக்காலத்தில் அதுகுறித்து மிகவும் மனம் வருந்தினார் என்று ஜப்பானின் ''ஹியோடோ''செய்தி நிறுவனம் தெரிவித்தது.

(ஐ- 10)

## மற்றொருவர் அடைக்கலம்

வடகொரிய ஆட்சியில் அதிருப்தியுற்ற மற்றும் ஒருவர் சோல் சர்வதேச விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்துள்ளார்.

# பெருவில் தங்கியிருக்கவே கெரில்லாக்கள் விரும்புகின்றனர்

லீமா, மார்ச் 6

பெரு தலைநகர் லீமாவில் 72 பணயக் கைதிகளை தங்கள் முற்றுகைக்குள் வைத்திருக்கும் ''துபக் அமாறு'' கெரில்லாக்கள் தாம் வெளிநாடு எதிலும் சென்று தஞ்சமடைய விரும்பவில்லை என்றும் —

தாங்கள் பெருவிலேயே தங்கியிருக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளனர்.

வானொலித் தொடர்பு மூலம் செய்தியாளர்களிடம் பேசிய இந்த கெரில்லா குழுவின் தலைவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

முன்னதாக இந்த கெரில்லாக்கள் வெளிநாடு ஒன்றில் தஞ்சமடைய விமான வசதியை கோரியிருந்தனர்.

இந்த கெரில்லாக்களுக்கு அடைக்கலம் அளிக்க விரும்பும் நாடுகளைக் கண்டறிவதற்காக பெரு அதிபர் அல்பார்ட்டே பிஜிமோரி கியூபாவுக்கும், டொமினிக்கன் குடியரசுக்கும் மேற்கொண்ட விஜயத்தை முடித்துக் கொண்டு பெரு திரும்பியுள்ளார்.

(ஐ)

மன்னிப்பு வழங்கத் தவறினால்

# மீண்டும் தாக்குதல் நடத்தபோவதாக தமிழக அரசுக்கு வீரப்பன் மிரட்டல்

சென்னை, மார்ச் 6

இந்தியாவில் நூற்றுக்கு மேற்பட்ட கொலைகள் தொடர்பாக கடந்த 15 வருடங்களாகத் தேடப்பட்டு வரும் பிரபல சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பன் தனக்கு மன்னிப்பு வழங்கப்படுமானால் தான் சரணடையத் தயார் என அறிவித்துள்ளான்.

தான் சரணடைவதாயின் பெருந்தொகையான பணம் வழங்கப்படவேண்டும் எனவும், தனது வாழ்க்கை பற்றிய திரைப்படம் ஒன்று தயாரிக்கப்படவேண்டும் எனவும் வீரப்பன் நிபந்தனை விதித்துள்ளான்.

தனது கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாவிடின் வன பரிபாலன அதிகாரிகள் மீதும், பொலீசார் மீதும் மீண்டும் தாக்குதல்களை ஆரம்பிக்கவிருப்பதாக தெரிவித்த வீரப்பன், அரசுக்கு ஒருமாத கால அவகாசத்தையும் வழங்கியுள்ளான்.

வீரப்பனின் நம்பிக்கைக்குரிய தமிழ்ச் சஞ்சிகை ஒன்றின் செய்தியாளர் ஒருவர் அந்த தொலைக்காட்சி நாடாவை சென்னையில் செய்தியாளர்களுக்கு திரையிட்டுக் காண்பித்துள்ளார்.

பொலீசார், வனபரிபாலன அதிகாரிகள், தகவல் வழங்குவோர் என சுமார் 100 பேரைக் கொலை செய்ததாகவும் சந்தன மரம், யானைத் தந்தங்கள் ஆகியனவற்றைக் கடத்தியதாகவும் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ள வீரப்பனைப் பிடித்துத் தருவோருக்கு 33 ஆயிரம் டொலர் சன்மானம் வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

(ஐ-10)

கடிதத்தில் இடம்பெற்ற தவறுக்கு

# இந்தியாவிடம் அமெரிக்கா வருத்தம் தெரிவிப்பு

வாஷிங்டன், மார்ச் 6

கடிதம் ஒன்றில் பஞ்சாப் என்பதற்குப் பதிலாக காலிஸ்தான் எனத் தவறுதலாகக் குறிப்பிடப்பட்டமைக்காக அமெரிக்க வெளிவிவகார அமைச்சு இந்திய அரசிடம் வருத்தம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் வசிக்கும் சீக்கிய தீவிரவாதியும், பஞ்சாப்பை தனிநாடு எனப்பிரகடனப்படுத்தி தன்னை அதன் அதிபர் என்று கூறிக்கொள்பவருமான கொம்றிச் சிங் மௌலா எழுதியகடிதம் ஒன்றுக்கு அமெரிக்க துணை அதிபர் ஆல்போர் எழுதிய பதில் கடிதத்திலேயே பஞ்சாப் என்பதை காலிஸ்தான் என்று குறிப்பிட்டிருந்தார். இதற்காகவே இந்திய அரசிடம் வருத்தம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பஞ்சாப் தனிநாட்டு கோரிக்கைக்கு அமெரிக்கா ஒருபோதும் ஆதரவு அளிக்காது என்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

(ஐ-10)

# உலக அரங்கில்

இந்தியாவின் தென்பகுதி மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகம் ஆகியவற்றின் எல்லையில் காட்டுப்பகுதியில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடா ஒன்றில் வீரப்பன் இத்தகவல்களைத் தெரிவித்துள்ளான்.

# தேர்தலைக் குழப்புவோருக்கு கடுமையான தண்டனை

## இந்தோனேசிய அரசு அறிவிப்பு

இந்தோனேசியாவில் மே மாதம் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலை குழப்பும் விதத்தில் நடந்து கொள்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ராணுவ தளபதி ஜெனரல் பீசால்டான் எச்சரித்துள்ளார்.

தேசிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்பளிக்கும் விதத்தில் பொதுத்தேர்தலுக்குத் தயாராகுமாறு ஜனாதிபதி சுகார்ட்டோ மக்களுக்கு வேண்டுகோள் விடுத்த அன்றைய தினமே இராணுவத் தளபதியும் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

ஜனாதிபதி சுகார்ட்டோவுக்கு 75வயதாகிறது. 6 தடவைகளாகத் தொடர்ந்து இவர் இந்தோனேசியாவை ஆண்டு வருகிறார். இம்முறையாவது இவர் பதவியைவிட்டு இறங்குவாரா என்று கேள்வி எழுப்பப்படுகிறது.

தென்மராட்சிப் பகுதியில்

# 34 பேருக்கு மூளை மலேரியா

கடந்த மாதத்தில் சாவகச்சேரி, பளை ஆகிய ஆஸ்பத்திரிகளில் காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றவர்களில் 34 பேர் மூளை மலேரியாக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருப்பதாக சம்பந்தப்பட்ட ஆஸ்பத்திரிகளின் மலேரியாத் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் 34 பேரும், பளை ஆபத்திரியில் 30 பேரும் மூளை மலேரியாகாய்ச்சலினால்பாதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற 815 பேரின் இரத்தம் பரிசோதிக்கப்பட்டபோது 230 பேர் மலேரியாவினாலும் 34 பேர் மூளை மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. (ஐ-117)

## பாலத்துள்ளே ஆயுதங்கள்

அனுராதபுரம் புதிய ரயில் நிலைய பாலத்துக்குள் இருந்து ஒரு தொகை ஆயுதங்கள் பொலீசாரால் கைப்பற்றப்பட்டன.

ரி—56 ரகத்தைச் சேர்ந்த 189 ரவைகள், 2 எஸ் ரகத்தைச் சேர்ந்த 84 [illegible] சொட்கண் தோட்டாக்கள் 5 ஆகியனவே பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

# படையினர் ரஜனியை தூக்கியவாறு வீடு ஒன்றினுள் செல்லக்கண்டேன்

## வழக்கு விசாரணையில் பொஸீஸார் சாட்சியம்

கொழும்பு, மார்ச் 6

உரும்பிராய் யுவதி ரஜனி வேலாயுதபிள்ளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு நீதிமன்றத்தில் கடந்த திங்களன்று ஆரம்பமானது.

பிரதம நீதிவான் முனிதாஸ முன்னிலையில் நடைபெற்ற விசாரணையில் அரச தரப்பில் சட்டத்தரணி கிரிஷாந்தி ஆஜரானார். எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சந்ஜேகம ஆஜரானார்.

இச்சம்பவம் தொடர்பாக முன்னர் படையினர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் இருவர் [illegible] யுள்ளதை அடுத்து நான்கு படையினர் மட்டும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மானபங்கப்படுத்துவதற்காக கடத்தியதும், கொலை செய்ததும் என்று இரு குற்றச்சாட்டுக்களைச்சுமத்தி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரச தரப்பு சட்டத்தரணி கிரிஷாந்தி சாட்சியை நெறிப்படுத்தினார். பொலீஸ் காரரான நிசந்த உபாலி தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:

இவ்வழக்கில் 16 சாட்சிகள் உள்ளதாகவும் அவர்களில் ஒருவர் ரஜனியின் தந்தையார் வேலாயுதபிள்ளை சபாபதியும் ஒருவர் என அரச சட்டத்தரணி தெரிவித்தார்.

நான் காவல் கடமையில் ஈடுபடும் நிலையம் கோண்டாவிலில் உள்ளது. கோண்டாவிலில் யாழ்ப்பாணத்துக்கும் பலாலிக்கும் செல்லும் வழியில் அது உள்ளது. எமது காவல் நிலையத்துக்கு அருகில் கடைகளும் உள்ளன.

சம்பவதினம் முதலாம், மூன்றாம், 4 ஆம் எதிரிகள் காவல் நிலையத்துக்கு அருகில் உள்ள வீடு ஒன்றுக்குள் ரஜனியை தூக்கிச் செல்வதைக் கண்டேன்.

சிறிது நேரத்தில் அந்த வீட்டினுள் இருந்து வெளியே வந்த 3ஆம், 4ஆம் எதிரிகள் என்னையும் உள்ளே வரும்படி அழைத்தனர். எனக்கு விருப்பமில்லை என்று கூறி நான் மறுத்து விட்டேன். சிறிது நேரம் தாமதித்து மூவரும் வெளியே வந்தனர். எங்கே அவள் என்று நான் கேட்டேன். அவள் இறந்து விட்டாள் என அவர்கள் கூறினர். இது பற்றி யாரிட

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புழுக்கொடியல் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்: J. வின்சன்ற், 118, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (45653)

15 மாதம் நிரம்பிய அழகிய பொமனேரியன் ஆண் நாய் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வராசா, 107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். (9351)

கொழும்புத்துறையில் சகல வசதிகளுடன் இரண்டேமுக்கால் நிலப்பரப்புடன் வீடு விற்பனைக்குண்டு. பதிவுத்தபால் மூலம் மட்டும் தொடர்பு கொள்ளவும். யோ. சத்தியநாதன், சட்டத்தரணி & நொத்தாரிஸ், 34 (16), நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை. (45656)

நல்லின சணல் ஆட்டுக்கடா விற்பனைக்குண்டு. சினைப்படுத்தலுக்கு ஏற்றது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி பே. சந்திரன் தேநீர்ச்சாலை, மீசாலை. (சி/245)

### மணமகன் தேவை

சைவ குடும்பம், பூர நட்சத்திரம், கிரக பாவம் 12, வயது 30, நோர்வேயில் இருக்கும் எலக்ரோனிக் அன்ட் கொம்பியூட்டர் (M. Sc.) பொறியியலாளருக்கு, படித்த அழகிய மணமகள் தேவை. ஸ்பொன்சர் செய்யப்படும். சைவ போசனம் விரும்பத்தக்கது. புகைப்படம், சாதகத்துடன் தொடர்பு: சு. ஆனந்தன் ஆசிரியர், மட்டுவில் வடக்கு சாவகச்சேரி, பொருத்தமற்றவை திருப்பித்தரப்படும். (சி/242)

### வீடு தேவை

பிறவுண் வீதி, நீராவியடிப் பகுதியில் வங்கி உத்தியோகத்தருக்கு வாடகைக்கு வீடு தேவை. தொடர்பு! மே/பா இல; 596, உதயன், யாழ்ப்பாணம். (45657)

### ஜோதிடம்

விவாகத்தடை, கல்வித்தடை, தொழிற்தடை, கஷ்டங்கள் தீரவும், பிரிந்தவர் ஒன்று சேரவும் ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப்பெறலாம். குருக்கள், பொய்யாமொழி ஜோதிடம், (ஸ்ரீ வீரமாகாளிஅம்மன் கோயிலடி), 140, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [45531]

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. (ஐ-4)


வெளிவந்துவிட்டது!

**இந்துநாகரிகம் பாகம் 3**

**“சொக்கன்”**

A/L இந்துநாகரிகம் I
பாடத்திட்டம்
முழுமைக்குமான
விரிவான நூல்

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,**
யாழ்ப்பாணம்.
(45622)



# A/L 99, 98

பிரிவு II ஆரம்பம்: 8-3-97 சனி காலை 9 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. இராஜேஸ்வரன் |
| வர்த்தகம் | — | திரு. பசில் |
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் |
| வணிகப்புள்ளிவிவரவியல் | — | திரு. தவசேகர் |
| அளவையியல் | — | திரு. R. P. சர்மா |
| தமிழ் | — | திருமதி மீரா |
| இந்துநாகரிகம் | — | திரு. ஜோதீஸ்வரன் |
| இந்துசமயம் | — | திரு. சிவானந்தன் |
| நாடகமும் அரங்கியலும் | — | திரு. கந்தவேள் |
| கிறிஸ்தவம் | — | திருமதி மல்லிகா |
| புவியியல் | — | பிரபல ஆசிரியர் |

A/L [ 97 புதிய பாடத்திட்டம்
96 பழைய பாடத்திட்டம்


இருபிரிவுக்கும் PAPER CLASS

ஆரம்பம்: 8-3-1997 காலை 10-00 மணி

அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.

**COLLEGE OF COMMERCE**
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(45646)


## ஓராண்டு நினைவஞ்சலி



பண்டிதர் - சைவப்புலவர்

**அமரர் க. சபா. ஆனந்தர்**

B. A. (London), B. O. L. (Madras)

(இளைப்பாறிய அதிபர், இணுவில்)

மலர்வு: 06 — 10 — 1910

உதிர்வு: 16 — 02 — 1996

திதி: 06 - 3 - 1997 வியாழக்கிழமை

### ஆனந்தர்

“ஆனந்தர் கற்பித்தல் ஆனந்தம், நல்லாசான்
ஆனந்தர் சொற்பொழிவோ ஆனந்தம் அழகழகு
ஆனந்தர் உரைநடையோ ஆனந்தம் அம்புவியில்
ஆனந்தர் திருக்கோலம் ஆனந்தந் தானே!”

### இணையில் சபா - ஆனந்தர்

“பாசமிகு கணவன் என்பேன்
பண்பு நிறை தந்தை என்போம்
தேசுவளர் மாமா என்போம்
தெள்ளமுதின் பாட்டா என்போம்
பேசுகல்விக் கடலே யென்போம்
பெட்புமிகு பெரியோய் என்போம்
ஈசனவர்க் கடியா னென்போம்
‘இணையில்’ சபா - ஆனந்தரே.”

★ ★ ★ ★

உலகு உள்ளவரை, உங்கள் நினைவு, மக்கள் உள்ளத்தில் நிறைந்து நிற்கும்.


**மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.**

“ஸ்ரீசாலினி”
காங்கேசன்துறை வீதி,
இணுவில். (45628)

## விளையாட்டு உபகரணங்கள்

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்பு பிரிவினர் கல்லூரிக்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களையும், ஒலிபெருக்கி சாதனங்களையும் அன்பளிப்பாக வழங்கி உள்ளனர். அவை விரைவில் கப்பல் மூலம் இங்கு எடுத்து வரப்படவுள்ளன. (ஐ-51)

## 45-வது நீங்காத நினைவு நாளில் ஊற்றான உணர்வலைகள் எங்கள் வாழ்வில்



உருவாகி மண்ணில்: 10 - 10 - 1940

பிரிவாகி விண்ணில்: 21 - 01 - 1997

**அமரர் ஐ. சண்முகம்**

(உப அதிபர் - தொழில்நுட்பக் கல்லூரி, மட்டக்களப்பு)

வரிவரியாய் எழுதினாலும் முடியாதையா!
உங்களது நீதி நேர்மை மாமலையாம்.
துளி துளியாய் ஓடுமெங்கள் கண்ணீர் ஐயா!
உங்களது பாதத்திலே காணிக்கையாம்.
எங்களோடு சேவைசெய்த அன்று உங்கள்
அருங்குணத்தை நாமறிந்தோம் இன்று எங்கள்
நெஞ்சினோடு ஒன்றிவிட்ட சண்முகமே!
உமைமறவோம் நீங்களெங்கள் நல்முகமே!

**பிறியா காமென்ஸ்,**
பணியாளர்.

வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி.
(45654)

## ஓராண்டு நீங்காத நினைவஞ்சலி



உதயம்: 21 — 08 — 1961

அஸ்தமனம்: 16 — 02 — 1996

**பத்மநாதன் யோகேந்திரன் (பாலா)**

திதி: 06 - 03 - 1997

ஒளி வழங்கி எரிகின்ற மெழுகுவர்த்தியாக வாழ்ந்து
எம்மை எல்லாம் வளமுடன் வாழ வழி கோலிய
எங்கள் அன்புச் செல்வமே பாலா!
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு
நீர் பாதி வழியில் மௌனமாக மீளாத்துயில்
கொண்ட காரணம் யாதோ?
ஆண்டு ஒன்று சென்றாலும் எங்களால் நிமிடமேனும்
உம்மை மறக்க முடியவில்லையப்பா!
பாலா! உமது அமைதியான சிரித்த முகம் தான்
எங்கள் கண் முன்னே நிழலாடுது
எந்நேரமும் எங்கள் இதயம் பாலா! பாலாண்ணா!
என்று ஓலமிட்டபடியப்பா!
எங்கள் உயிரே பாலா! எங்கள் குடும்ப விளக்கே!
நீ அணைந்து விட்டாயா?
உன் அழகு முகம் அன்பான பார்வை, அமைதியான
நடை, தயாளகுணம், தர்மசிந்தை, சகோதரபாசம்
எதை நாம் மறப்பது?
பாலா! பாவியாகிப் போன அன்னை கலங்குகின்றாள்
இங்கு.
ஆவியாகிப் போன உன்னை காக்க வேண்டும்
தெய்வமே!
எங்கள் செல்வமே! உமது ஆத்ம சாந்திக்காக கண்ணீருடன் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சிவ சாந்தி! ஓம் சிவ சாந்தி! ஓம் சிவ சாந்தி!

உமது நினைவுடன் வாழும்:

**அப்பா, அம்மா, ஆசைத்தம்பி சுதா, [கனடா]
தம்பிமார், தங்கை ஜகதாம்பிகை, உற்றார்,
உறவினர், நண்பர்கள்,
மீசாலை நண்பர் வினாயகமூர்த்தி ஆசிரியர் குடும்பம்.**

R. பத்மநாதன்,
சேர்ச் லேன், உடுவில். C. K. M. (9344)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# மன்னாரை நோக்கிய படை நகர்வை நடத்த அரசாங்கம் முடிவு செய்தது ஏன்?

வவுனியா — மன்னார்ப் பாதையை மீட்கும் 'எடிபல்' (துணிச்சற் படை) இராணுவ நடவடிக்கையை கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதி அரசு ஆரம்பித்தது.

அதற்கு முன்னரே வவுனியா நகரில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைக்கான ஆயத்த ஏற்பாடுகள், ஆரவாரங்கள் வவுனியாவிலிருந்து வன்னியின் ஏனைய பகுதிக்கு பெரும் படை நகர்வு இடம்பெறப் போகின்றது என்பதை வெளிக்காட்டி விட்டன. இந்த ஏற்பாடுகளை வைத்துத்தான் வன்னியில் பெரும் படை நகர்வு இடம்பெறப்போகின்றது என்ற உத்தேச தகவலை முன்கூட்டியே சில செய்தி நிறுவனங்களால் அவ்வப்போது வெளியிடவும் முடிந்தது.

ஆனால் வவுனியாவிலிருந்து எந்தத் திசையை நோக்கியதாக படை நகர்வு இருக்கும் என்பதை அப்போது ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

மேற்கே மன்னாரை நோக்கி படை நகர ஆரம்பித்து மூன்று நாள்களின் பின்னரும் கூட, வடக்கு நோக்கிய நகர்வுக்கு முன்னர் இடம்பெறும் தந்திர நடவடிக்கையே அது என்று கருதப்பட்டது.

### விமர்சகர் கூறியது

''வவுனியாவுக்கு வடக்கே உள்ள ஓமந்தைப் பிரதேசத்தை ஊடறுத்து — பிரதான கண்டி வீதிக்குக் குறுக்காக — மேற்கிலிருந்து கிழக்காக — பல கிலோ மீற்றர் நீளத்திற்கு பலம் வாய்ந்த காப்பகழிகளையும், அரண்களையும் பாரிய அளவில் புலிகள் அமைத்துள்ளனர். படையினர் வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கிச் செல்வதாயின் இந்த அரண்களைத் தாண்டியே செல்ல வேண்டியிருக்கும். அப்படிச் செல்ல முற்பட்டால் படைகளுக்கு பேரழிவு ஏற்பட வாய்ப்புண்டு. எனவே இதனைத் தவிர்ப்பதற்காகவே இராணுவம் மன்னார்ப் பக்கமாக — மேற்கு நோக்கி — சில மைல் தூரம் சென்று அங்கிருந்து விடுதலைப் புலிகளின் ஓமந்தை காப்பகழிகளைச் சுற்றிப் பின்புறமாக வந்து — புலிகளைச் சுற்றி வளைக்கத் திட்டமிட்டிருப்பது போல் தெரிகின்றது.'' — என கொழும்பு இராணுவ விமர்சகர் ஒருவர் 'எடிபல' நடவடிக்கை ஆரம்பித்த அடுத்த சில தினங்களில் தெரிவித்திருந்தார்.

அவ்வளவு தூரத்துக்கு வவுனியாவிலிருந்து மேற்கு நோக்கிய படை நகர்வு ஒன்று இடம்பெறுவதற்கான வாய்ப்புக் குறித்து இராணுவ விமர்சகர்களுக்கு நம்பிக்கை இருக்கவில்லை.

### மூன்று திசைகளில் நகர்வதற்கு வாய்ப்பு

'எடிபல' படை நடவடிக்கை ஆரம்பமாக முன்னர், வவுனியாவிலிருந்து வன்னியின் ஏனைய பகுதிகளை நோக்கி மூன்று விதமான படை நகர்வுகளில் ஏதேனும் ஒன்று இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

உத்தேச மூன்று படை நகர்வுகளும் வருமாறு:-

(அ) வவுனியாவிலிருந்து மேற்கு நோக்கிச் சென்று வவுனியா — மன்னார் பாதையைத் திறப்பது. ('எடிபல' நடவடிக்கையின் மூலம் அதுவே நிறைவேற்றப்பட்டது.)

(ஆ) வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கிச் சென்று வவுனியா — கிளிநொச்சிப் பாதையைத் திறப்பது. அதன் மூலம் வடக்கிற்கான தரைப் பாதையை ஏற்படுத்துவது.

(இ) வவுனியாவிலிருந்து கிழக்கு நோக்கி நகர்ந்து கொக்கிளாய் வழியாக முல்லைத்தீவைச் சென்றடைவது. இதன் மூலம் வடக்கு — கிழக்கை துண்டாடுவதுடன் மீண்டும் முல்லைத்தீவில் படை முகாமை அமைப்பது.

இந்த மூன்று திட்டங்களில் ஏதேனும் ஒன்றை செயற்படுத்துவதே அரசின் நோக்கமாக இருக்கும் என்று முன்னரே ஊகிக்கப்பட்டிருந்தது.

இவற்றில் மேற்கு நோக்கிய — மன்னாரை நோக்கிய — நகர்வை அரசு முதலில் தேர்ந்தெடுத்தது ஏன்?

★ ★ ★

### கிழக்கு நோக்கிய நகர்வுத் திட்டம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்த வரை கிழக்கிலங்கை தான் அதன் இதயம். வடக்கு — கிழக்கு இணைந்த — தாயகப் பூமியை உறுதிப்படுத்தாத — எந்தத் தீர்வுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளோ, மற்றைய தமிழ் அரசியல் கட்சிகளோ இணங்கப் போவதில்லை.

வடக்கு — கிழக்கை இணைத்துள்ள — முல்லைத் தீவுமாவட்டத்துக்கும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் இடையே திருகோணமலை மாவட்டத்தை தொட்டு நிற்கும் மணலாறு (வெலிஓயா) பிரதேசம் தான் ஈழவிடுதலைப் போராட்டத்தின் உயிர் என்று கருதப்படுகிறது.

இந்தப்பிரதேசத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைச் செய்து, அதனை சிங்களவர் மயமாக்குவதன் மூலம் தமிழர்களின் பாரம்பரிய தாயகமான வடக்கு — கிழக்கைத் துண்டாட பெரும்பான்மைச் சிங்களவர்களைக் கொண்ட அரசுகள் காலங் காலமாக முயன்று வருகின்றன என்பது உலகறிந்த பரகசியம்.

சுருக்கமாகச் சொல்வதானால் ஈழ விடுதலைப் போராட்டத்தின் 'கோலான் குன்று' இந்தப் பிரதேசம் தான்.

இந்தப் பிரதேசத்தில் உள்ள சிங்களக் குடியேற்றங்கள் மீதுதான் — கெண்ட், டொலர், அறந்தலாவை, வெலிகந்த பகுதிகள் மீது தான் — கடந்த தசாப்தத்தில் பல்வேறு தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தப் பிரதேசம் ஊடாக ஓர் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, வடக்கு — கிழக்கைப் பிரிக்கக் கூடியதாக இராணுவ வேலி ஒன்று அமைக்கப்பட்டால், அது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தும் என்பது கண்கூடு.

வடக்கு — கிழக்கு தரை வழியாகத் துண்டிக்கப்பட்டால் புலிகளின் செயற்பாட்டில் அது பல பின்விளைவுகளை ஏற்படுத்தும். வடக்கு — கிழக்குக்கு இடையே கடல் வழிப் பாதையை மட்டும் வைத்துக்கொண்டு, வன்னிப் பகுதியைத் தக்க வைப்பது என்பது புலிகளுக்கு கஷ்டமானதாக இருக்கும்.

வடக்கு — கிழக்கைப் பிரிக்கும் இராணுவ வேலியை அமைப்பது அல்லது அதன் வழியே தரைப்பாதை ஒன்றைத் திறப்பது அரசியல் ரீதியாகவும், போர் தந்திர ரீதியாகவும் அரசுத் தரப்புக்கு பல அனுகூலங்களைத் தரும். ஆயினும் அத்தகைய திட்டத்தைச் செயற்படுத்தி, அந்த வேலியைத் தக்கவைப்பது, மிகக் கஷ்டமான காரியம் ஆகும்.

அதற்கு மேலும் குறைந்தது 25 ஆயிரம் துருப்புகள் தேவை. தவிரவும் அத்தகைய இராணுவ வேலிக்கு அல்லது பாதைக்கு இருபுறத்திலும் புலிகளின் பாதுகாப்பான தளங்கள், நிலைகள் இருப்பதால் இராணுவ வேலி மீது ஒரே சமயத்தில் இருபுறங்களில் இருந்தும் புலிகள் தாக்கும் அபாயமும் இருக்கும்.

புலிகள் மிகப்பலமாக தமது கோட்டைகளை அமைத்திருக்கும் முல்லைத் தீவுக் காடுகள் ஊடாக இப்போது நகர முயற்சிப்பது பேரழிவைத்தரக்கூடிய விஷப் பரீட்சை என்பதும் படை உயர்பீடத்துக்குத் தெரியாததல்ல.

இத்தகைய காரணங்களினாலேயே வவுனியாவிலிருந்து கிழக்கு நோக்கிய நகர்வு எண்ணத்தை படைத் தலைமைப்பீடம் கைவிட்டிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

★ ★ ★

### வடக்கு நோக்கிய நகர்வுத்திட்டம்

அடுத்து வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கி — கிளிநொச்சியை நோக்கி — நகரும் திட்டத்தைப் பார்ப்போம்.

போர்த் தந்திர ரீதியில் நோக்கினால் வவுனியா — கிளிநொச்சி இடையேயான தரைப்பாதை திறப்புத்தான் படையினருக்கு நன்கு உபயோகமானது.

வடக்கில் நிலைகொண்டுள்ள சுமார் 40 ஆயிரம் படையினருக்குமான விநியோக நடவடிக்கைகளை வான் வழியாகவும் கடல் வழியாகவும் மேற்கொள்வதற்கு தினசரி 'அல்லாடும்' அரசின் கஷ்டத்துக்கு, மேற்படி பாதை திறப்பது முற்றுப்புள்ளி வைத்துவிடும்.

அரசியல் ரீதியிலும் அரசுக்கு பெரும் மதிப்பையும் பெயரையும் அது பெற்றுக் கொடுக்கும்.

ஆனால் அத்தகைய முயற்சியில் பல்வேறு சிரமங்கள், கஷ்டங்களை படையினர் எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

வவுனியா — கிளிநொச்சிப் பாதையைத் திறப்பதானால் புலிகளின் வலுவான தளப் பகுதியை ஊடறுத்துத்தான் அரச படைகள் செல்ல வேண்டியிருக்கும்.

குறிப்பாக காடும் காடு சார்ந்த பகுதிகளில் போரிட வேண்டியிருக்கும்; காட்டுக்குள் உள்ளிழுத்துத் தாக்கும் வாய்ப்புக்கள் புலிகளுக்குத் தான் கைகொடுக்கும். அத்தோடு நகரும் படை மீது கிழக்கு — மேற்கு ஆகிய இரு பக்கங்களிலிருந்தும் ஒரே நேரத்தில் தாக்கக் கூடியதாக இருபுறத்திலும் புலிகளின் வலுவான தளங்கள் அப்பிரதேசத்தில் உள்ளன.


## தொகுப்பு: கவி

எனவே இப்பிரதேசத்தில் நகர்வதும், கைப்பற்றிய பகுதிகளைத் தக்க வைப்பதும் மிகச் சிக்கல் நிறைந்த வேலையாக இருக்கும்.

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரையான தரைப் பாதையைத் திறப்பதற்கும் குறைந்தது 25 ஆயிரம் துருப்புகளாவது தேவைப்படும்.

அவ்வாறு பெரும் எண்ணிக்கையான துருப்புகளைக் கொண்டு பாதையைத் தக்க வைத்தாலும், புலிகளின் பொறிக்குள் எங்காவது எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்டு பாரிய இழப்பைப் படையினர் சந்தித்தால் அரசாங்கத்துக்குப் பெரும் தர்மசங்கடமாகிவிடும்; உள்ளூராட்சித் தேர்தல் வெற்றியைக் கூட அது பாதித்துவிடும்.

## தேர்தலில் வெல்வதற்கான பாதையைத் திறப்பதே நோக்கம்; போரில் வெல்வதற்கான பாதையைத் திறப்பது அல்ல!




உண்மையில் தற்போது மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கையின் நோக்கம் உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் கட்சிக்கு வெற்றிப் பாதையைத் திறப்பதுதான்; போரில் வெல்வதற்கான பாதையைத் திறப்பதல்ல.

எனவேதான் போர்த் தந்திர ரீதியில் சாதகமானதும் அதேசமயம் கடினமானதும் ஆபத்தானதுமான வவுனியா — கிளிநொச்சி தரைப்பாதையைத் திறக்க அரசு இப்போது முயலவில்லை எனலாம்.

★ ★ ★

### மேற்கு நோக்கிய நகர்வு ஏன்?

இனி, வவுனியா — மன்னார்ப் பாதையைத் திறக்க அரசு முடிவு செய்தது ஏன் என்று பார்ப்போம்.

வவுனியா — மன்னார் வரையான தூரம் 75 கிலோ மீற்றர்.

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரையான தூரம் 70 கிலோ மீற்றர்.

ஐந்து கிலோ மீற்றர் தூரம் குறைவான பாதையை விடுத்து வவுனியா — மன்னார்ப் பாதையைத் திறக்க படைத்தரப்பு முடிவு செய்தது ஏன்?

காரணம் தெளிவானது. வவுனியாவிலிருந்து கிளிநொச்சிக்குச் செல்லும் பாதையை விட மன்னாருக்குச் செல்லும் பாதை படையினரைப் பொறுத்தவரை சுலபமானது; ஆபத்துக்கள் குறைந்தது.

வழக்கமாக இப்பாதையில் சனநடமாட்டம் குறைவாகவே இருக்கும்.

பாதையின் இரு மருங்கிலும் இடையிடையே காட்டுப் பகுதிகளும் பெருவெளிகளும் உள்ளன. குறிப்பாக உயிலங்குளம் பகுதி வயல் வெளிகளைக் கொண்டது. அவ்வெளிகள் ஊடாக புலிகள் முன்னேறி வந்து தாக்குவது கடினம். அத்தோடு காடுகள் அல்லாத பெருவெளிப் பகுதிகள் ஊடாக புலிகள் முன்னேறுவதை தொடர் ஷெல் தாக்குதல்கள் மூலம் படையினரால் ஓரளவு கட்டுப்படுத்தக்கூடியதாகவும் இருக்கும்.

மேலும் இப்பாதை குடிசன அடர்த்தி குறைவான பகுதிகளைக் கொண்டது. மன்னார், தள்ளாடி இராணுவ முகாம்களிலிருந்து இப்பாதையில் குறிப்பிட்ட தூரம் வரை அவ்வப்போது படையினர் முன்னேறி வந்து செல்வதால் இப்பாதையின் ஒரு பகுதி ஏற்கனவே படையினருக்கு பரிச்சயமானதாக இருந்தது.

இதனால் இப்பாதையை இலகுவாகக் கைப்பற்ற முடியும் என்று படைத்தரப்பு கருதியது.

மேலும் இப்பாதையை கைப்பற்றி அதில் படையினரைத் தொடராகநிறுத்துவதன் மூலம் —

பாதைக்குத் தெற்கே உள்ள சிலாவத்துறை, அரிப்பு, முள்ளிக்குளம், பூக்குளம், வேப்பங்குளம், அருவியாறு போன்ற பகுதிகளும் புத்தளம், கற்பிட்டி ஆகியவற்றுக்கு வடக்கே உள்ள வில்பத்து காட்டுப்பகுதியும் முற்றாக புலிகளின் நடமாட்டத்திலிருந்து — புலிகளின் நடமாட்டம் உள்ள ஏனைய வன்னிப் பகுதியிலிருந்து — விடுவிக்கப்பட்டு விடும் என படைத்தரப்பு கருதியதாகத் தெரிகின்றது.

வவுனியா — மன்னார்ப் பாதை திறக்கப்பட்டு படையினரின் கட்டுப்பாட்டில் வந்து விட்டதால் மேற்படி பிரதேசங்களுக்கு விடத்தல் தீவு, அடம்பன் போன்ற இடங்களிலிருந்து இப்பாதையை ஊடறுத்தோ அல்லது கடல்வழியாகவோ தான் புலிகள் வரவேண்டியிருக்கும்.

எனவே இப்பாதையைத் திறப்பதால் பாதைக்கு தெற்கே உள்ள பெரிய பிரதேசம் விடுவிக்கப்படும் என்றும் —

அதன் மூலம் அங்கு இதுவரை பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக பெருமளவில் நிறுத்தப்பட்டிருக்கும் துருப்புகளை வாபஸ் பெற்று, அத்துருப்புகளை புதிதாகத் திறக்கப்பட்ட பாதையைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடுத்த முடியும் என்றும் — படைத்தரப்பு கணிப்பிட்டிருக்கக் கூடும்.

( 6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனங் குற்றியைக் கொத்திய சிறுவன் உடல் சிதறிப் பலி!

தென்மராட்சி, மார்ச் 6

விறகுக்காக காய்ந்த பனம் குற்றியைக் கொத்தியபோது அது திடீரென வெடித்ததில் கொத்திய சிறுவன் உடல் சிதறிப் பலியான சம்பவம் கடந்த வியாழக்கிழமை மந்துவில் பகுதியில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த மோகனதாஸ் நரேஸ் (வயது 11) என்னும் சிறுவனே உயிரிழந்தவர் ஆவார்

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் ஐந்தாம் ஆண்டில் கல்வி பயின்ற இச் சிறுவன் இரு வாரங்களுக்கு முன்பே வன்னியிலிருந்து சொந்த வீட்டுக்கு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## மண்எண்ணெய்

யாழ். ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் தற்போது குடும்பம் ஒன்றுக்கு 5 லீற்றர் மண்எண்ணெய் பங்கீட்டு அட்டைக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. (ஐ-51)

# அனாதைச் சிறார்களுக்கு வடமராட்சியில் 2 விடுதிகள்

கடந்த கால வன்செயல்கள் காரணமாக பெற்றோரை இழந்து ஆதரவு அற்று வாழும் அனாதைச் சிறார்களுக்கென பருத்தித்துறை பங்கில் இரு விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். கத்தோலிக்க திருச்சபையின் ஆதரவுடன் பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு. பி. எம். இம்மானுவேல் அடிகள் இவ்விரு விடுதிகளையும் ஆரம்பித்துள்ளார்.

ஆண்களுக்கான விடுதிக்கு ''புனிதவளன் மாணவர் விடுதி'' என்றும், பெண்களுக்கான விடுதிக்கு ''புனித மரியாள் மாணவிகள் விடுதி'' என்றும் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

விடுதிகளில் உள்ள மாணவ மாணவிகளுக்கு பாடசாலை வசதி, மாலை நேர படிப்பு வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இரு கத்தோலிக்கர்கள் தமது வீடுகளை இவ்விடுதிகளை அமைப்பதற்காக வழங்கியுள்ளனர்.

பருத்தித்துறை நாலாம் குறுக்குத்தெருவில் இவ்விடுதிகள் அமைந்துள்ளன. (ஐ-173)

★ சிவராத்திரி, ஹஜ்பெருநாள்:

# விடுமுறை வழங்காததை எதிர்த்து தாக்கல் செய்த மனு நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 6

சிவராத்திரி, ஹஜ் பெருநாள் ஆகிய புனித தினங்களில் பொது விடுமுறை வழங்கப்படாதது அடிப்படை உரிமையை மீறுவதாகும் என்று ஆட்சேபித்து இரு சட்டக் கல்லூரி மாணவர்கள் தாக்கல் செய்திருந்த வழக்கை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

நீதியரசர் மார்க் பெர்னாண்டோ வழங்கிய இந்தத் தீர்ப்பை நீதியரசர்கள் விஜயதுங்க, குணவர்த்தனா ஆகியோரும் ஏற்றுக் கொண்டனர்.

பொது விடுமுறைகளைத் தீர்மானிக்கும் விடயத்தில் அரசு பல்வேறு விடயங்களை கவனத்தில் மேற்கொள்ள உரித்துடையது என்ற அடிப்படையிலேயே விடுமுறை வழங்காததை ஆட்சேபித்து தொடரப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கில் அவர்களின் உரிமை மீறப்படவில்லை என்ற முடிவுக்கு தாம் வந்ததாக நீதியரசர் தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். (ஐ-3)





# வாழ்த்துகின்றோம்

**1996ஆம் ஆண்டு க. பொ. த. (உ/த) வர்த்தகப் பிரிவில் நான்கு பாடங்களிலும் விசேட சித்தி (4 A) பெற்று**

மாவட்ட மட்டத்தில் 5ஆம் இடத்திலும், அகில இலங்கை மட்டத்தில் 17 ஆம் இடத்திலும் நிலைபெற்றிருக்கும்

**மட்டுவில் தெற்கு வளர்மதி பதிவாழ் மாணவன்**

**செல்வன் இராசையா ஜனதன்**

அவர்களை

கல்வி நலம் இனிதாகி
காலமெல்லாம் களிப்பாகி
கற்றவரின் சபை நடுவே
காவியத்து நாயகனாய்
கல்வியோடு உறவாட
கனிவாக வாழ்த்துகின்றோம்.

**வளர்மதி ச. ச. நிலையம்.**

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (இ-246)


## படையினர்...

(3 ஆம் பக்கத் தொடர்)

மும் கூற வேண்டாம் என்று அவர்கள் என்னைக் கேட்டுக் கொண்டனர். பயத்தினால் நானும் எதுவும் கூறவில்லை — இவ்வாறு சாட்சி தெரிவித்தார்.

எதிரிகள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி சஞ்சே கமகே சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன் தமது தரப்பினருடன் கலந்தாலோசிக்க வேண்டி உள்ளது என்று கூறி, வேறு திகதி தருமாறு கேட்டதை அடுத்து நீதிவான் வழக்கை மார்ச் 31 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

ரஜனியின் குடும்ப நலனை கவனிக்கவென சட்டத்தரணி என். ரவிராஜும், சட்டத்தரணி க. பூபாலசிங்கமும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

காங்கேசன்துறை பொலீஸாரின் சார்பில் பிரதம இன்ஸ்பெக்டர் வில்மன் பெரேரா நீதிமன்றில் பிரசன்னமாகி இருந்தார்.

ரஜனி அணிந்திருந்த ஆடைகள், செருப்பு மற்றும் கட்டிலுக்கு விரிக்கும் கம்பளம் என்பனவும் மன்றில் கையளிக்கப்பட்டன. (ஐ)

## மன்னாரை...

(ஐந்தாம் பக்கத் தொடர்)

இந்தப் பாதையின் தெற்குப் பிரதேசம் விடுவிக்கப்பட்டு விட்டதால், பாதையைப் பாதுகாக்கும் படையினர் மீது வடக்குப் பக்கத்திலிருந்து மட்டுமே புலிகள் தாக்கும் வாய்ப்பு இருக்கும் என்றும் —

இதனால் ஒரு பக்கத்து ஆபத்துக்கு மட்டுமே படையினர் ஈடுகொடுக்க வேண்டியிருக்கும் என்றும் —

படைத்தரப்பு மதிப்பிட்டிருக்கும்.

அதேசமயம் —

இதுவரை காலமும் தரை வழியாக வில்பத்து காடுகள் ஊடாகவோ அல்லது கடல் வழியாக புத்தளம் கரையூடாகவோ ஆயுதங்களை புத்தளம் பகுதிக்கு எடுத்து வந்து, அங்கிருந்துதான் கொழும்புக்கும் ஏனைய தென் பகுதிகளுக்கும் அவற்றை புலிகள் கடத்துகின்றார்கள் என்று படைத்தரப்புக் கருதிவந்தது.

தற்போதைய நடவடிக்கை மூலம் வில்பத்து காட்டுப் பகுதி விடுவிக்கப்பட்டு விட்டதால் தரைவழியாக புத்தளம் பகுதிக்கு ஆயுதங்களை அனுப்பும் புலிகலின் முயற்சி தடைப்பட்டு விடும் என படைத் தரப்பு நம்புகின்றது.

வில்பத்து கடலோரத்தில் குதிரமலை முனைப் பகுதியில் கடற்புலிகளின் தளம் ஒன்று இருப்பதாகக் கூறப்படுகின்றது. வில்பத்துக்கான தரைவழிப்பாதை தடைப்பட்டாலும், வடக்கிலிருந்து கடல்வழியாக மன்னார், சிலாவத்துறைப் பகுதிகளை சுற்றிக் கொண்டு வந்து இந்தத் தளம் ஊடாக வில்பத்து பகுதிக்குள் புலிகள் ஊடுருவ முடியும் என்று கருத இடமுண்டு.

எது எப்படியாயினும் அரசுப் படைகள் கடந்த மாதம் மேற்கொண்ட 'எடிபல' நடவடிக்கைக்கு புலிகள் பெரிய அளவில் எதிர்ப்புக் காட்டவில்லை என்பது தெரிந்ததே.

''இந்த நடவடிக்கை, முன்னைய படை நடவடிக்கைகள் போலல்லாமல் 'உருகிய வெண்ணெயை கத்தியால் வெட்டியது போன்று' மென்மையான செயலாக இருந்தது'' — என்று இந்நடவடிக்கையை வழி நடத்திய பிரிகேடியர் ஒருவர் சொன்னார்.

புலிகள் இப்போது அதிக எதிர்ப்புக் காட்டவில்லையாயினும் படையினர் நிலை கொண்ட பின்னர், உளவுத் தகவல்கள் மூலம் விவரங்களைத் திரட்டிக் கொண்டு திடீர்த் தாக்குதல்களை நடத்தி — [illegible] — போரிடத் திட்டமிட்டிருக்க வாய்ப்புண்டு.

## தவக்காலச் சிந்தனை

(23 நாள் வியாழக்கிழமை)

இறைவன் மோயீசனோடு சீனாய்மலையில் உருவாகுகையில், கீழே மலையடிவாரத்தில்இஸ்ராயேலர், விடுதலையளித்த தேவனை ஒதுக்கி விட்டு, வீணான வெட்டிக் சிலைகளுக்குத்தூபமிடனர் (யாத்: 32-1). அத்த் இஸ்ராயேலரை விட நாம் மேலானவர்கள் அல்லர். வாழ்வழித்த இறைவனை வழிபடச் செல்கின்றோம்; எமதுமனநிலை என்ன? தூய எண்ணத்துடன் செல்கின்றோமா? பகை, விரோதம், சுரண்டிவாழும் தன்மை அடுத்தவன் சுதந்திரத்தை அழித்துவிட்டு சகோதரர் இடையே பிணக்குகளை வளர்த்துக் கொண்டு, வாழ்ந்து கொண்டு இறைவனை வழிபட்டுச் செல்கின்றோம், எமது செபம் ஏற்றுக்கொள்ளப்படுமா? நாமும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் தானா? நமது வாழ்வும் வழிபாடும் ஒன்றிணையச் சிந்திப்போம்; செயற்படுவோம்.

சூ. மரியநாயகம்

## ஓவியப்போட்டி பரிசளிப்பு நாளை

உலக உளநல நாளையொட்டி சாந்திகத்தினால், உதயன் ஆதரவுடன் நடத்தப்பட்ட ஓவியப் படைப்பாக்கக் களத்தில் பங்குபற்றி வெற்றியீட்டிய கலைஞர்களைக் கௌரவிக்கும் விழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும்.

சுண்டுக்குளி, கச்சேரி — நல்லூர் வீதியில் உள்ள சாந்திகம் மண்டபத்தில் நாளை மு. ப. 10 மணிக்கு இந் நிகழ்வு ஆரம்பமாகும்.

நிகழ்ச்சிகளுக்கு வைத்திய கலாநிதி செ. சு. நச்சினார்க்கினியன் தலைமை வகிப்பார்.

போட்டியில் வெற்றிபெற்ற கலைஞர்களை மூத்த ஓவியர் மணியம் கௌரவிப்பார்.

பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) 'மனதின் வியாபகம்' என்னும் பொருளில் சிறப்புரை நிகழ்த்துவார்.

போட்டியில் தெரிவு செய்யப்பட்ட ஓவியங்கள் குறித்த மதிப்பீட்டுரையை ஓவியர் ரமணி நிகழ்த்துவார். (அ)

## செய்திச் சாரம்

### தனியான கணக்குக் கிளை

குருநகர், மார்ச் 6

யாழ். மாவட்டத்தில் வலயம் - 2 கல்விப் பணிமனைக்கென தனியாகக் கணக்குக் கிளை ஒன்றைத் திறக்க மாகாண கல்வி அமைச்சின் அனுமதி கிடைத்திருப்பதாகத் தெரியவருகிறது. இதற்கென தனியான ஒரு கணக்காளரும் நியமிக்கப்பட உள்ளார்.

வலயம் - 2 பாடசாலைகளுக்கான நிதி கொடுக்கல் வாங்கல்கள் யாவும் தற்போது வலயம் - 1 பணிமனை கணக்குக் கிளை மூலமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ-51)

### விளையாட்டுப் போட்டிகள்

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு. எஸ். சண்முககுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-4)

★ ★ ★

யாழ். சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் அருட்சகோதரி மேரி யுவேரியா தலைமையில் நடைபெறவுள்ளன. (ஐ-51)

### பரீட்சையில் முதலிடம்

நவாலியை சேர்ந்த நடராஜா ரவிச்சந்திரன் என்ற மாணவர் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் துறை வருடாந்த இறுதிப் பரீட்சையில் முதலிடம் பெற்றுள்ளார்.

இதனை பாராட்டுமுகமாக மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை அவருக்கு நிதி அன்பளிப்பு வழங்கியது. (ஐ-135)

### மகாசபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

நீர்வேலிக் கந்தசுவாமி கோயிலின் விசேட மகா சபைக் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் சபையின் தலைவர் க. சி. பகவத்சிங்கம் தலைமையில் நடைபெறும். (இ-4)

### 4 மாணவர்கள் சித்தி

வடமராட்சி, மார்ச் 6

களுத்துறை கல்விக் கல்லூரி ஆங்கில நெறிக்கான புகுமுகப் பரீட்சையில் யாழ், குடாநாட்டில் 4 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.

இவர்களில் ஒருவர் நெல்லியடியைச் சேர்ந்த செல்வி சியாமளா தேவச்சந்திரன் ஆவார்.

வடமராட்சியிலிருந்து இவர் ஒருவரே இப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். (ஐ-173)

### "பென்ரோச்" பற்றறிகள் தட்டுப்பாடு

வடமராட்சி, மார்ச் 6

யாழ். குடாநாட்டில் ''பென் ரோச்'' பற்றறிகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்த வகை பற்றறிகள் கொழும்பிலிருந்து எடுத்து வர தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சாதாரண ''ரோச் பற்றறி'' இங்கு தாராளமாகக் கிடைக்கிறது. (ஐ-173)

### ரூ. 40 ஆயிரம் செலவில் மலகூடம்

வடமராட்சி, மார்ச் 6

கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் 40 ஆயிரம் ரூபாய் செலவில் மலசல கூடம் அமைக்கப்பட்டுவருகிறது.

நெல்லியடி வணிகர் கழகம் இம் மலசல கூடத்தைக் கட்டுவதற்கான நிதியை வழங்கியுள்ளது. (ஐ-173)

### வேலாயுதம் ம.வி. நூற்றாண்டு விழா

வடமராட்சி, மார்ச் 6

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய நூற்றாண்டு விழா பாடசாலை பழைய மாணவர் சங்க ஆதரவில் எதிர்வரும் மே மாதம் கொண்டாடப்படவுள்ளது.

இதனையொட்டி நூற்றாண்டு விழா மலர் ஒன்றும் வேளியிடப்படும். (ஐ-173)

### நயினாதீவில் அடையாள அட்டை

யாழ்ப்பாணம், மார்ச் 6

நயினாதீவில் அடையாள அட்டை இல்லாதோருக்கு அடையாள அட்டைகள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை இதற்கென யாழ். ஆட்பதிவுத்திணைக்கள அதிகாரிகள் ஊழியர்கள் குழு அங்கு விஜயம் செய்தது. (இ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# கல்விச் சீர்திருத்தம் 4 கட்டங்களில் அடுத்த ஆண்டு அமுலுக்கு வரும்

## ஜனாதிபதியிடம் நேற்று அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு, மார்ச் 6

நாட்டின் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய கல்வி மறுசீரமைப்புப் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட அமைச்சர் றிச்சர்ட் பத்திரான தலைமையிலான ஜனாதிபதி செயலணிக்குழு அதன் சிபார்சுகளை நேற்று ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தது.

புதிய சிபார்சுகள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து அமுலுக்கு வரவுள்ளன. இதன்படி பாடசாலைகளில் 4 கட்டங்களில் புதிய சீர்திருத்தம் அமுல் செய்யப்படும்.

அவை வருமாறு:-

★ முதலாவது கட்டம் ஆண்டு ஒன்றிலிருந்து அமுல் செய்யப்படும். நாடெங்கிலுமுள்ள சிறுவர்களுக்கு சமமான வாய்ப்புகளைக் கொண்ட தரம் - 1 வகுப்புகள் நிறுவப்படும்.

★ இரண்டாவது கட்டமாக 6 ஆம் ஆண்டுக்கு புதிய மாணவர்களை அனுமதிக்கும் திட்டம் அமுல் செய்யப்படும். இவற்றுக்கு உதவியாக பாடவிதானங்கள், வேலைத் திட்டங்கள், பாடப் புத்தகங்கள் என்பன மீளாய்வு செய்யப்பட்டு திருத்தி அமைக்கப்படும். அத்துடன் உடனடியாக ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்படும். மாணவர்களின் கற்றல் சார்ந்த தேர்ச்சிகளையும், உளச்சார்புகளையும் அடையாளம் காணுதல், விஞ்ஞானம், கணிதம் போன்ற தெரிவு செய்யப்பட்ட பாடங்கள் சார்ந்த இருமொழி கற்பித்தல் என்பன இடம் பெறும்.

★ மூன்றாவது கட்டத்தில் ஜி. சீ. ஈ. சாதாரண தரம் பயிலும் 11 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு பாடவிதானத்தில் உள்ளடக்கப்படும் பாடங்களும், தொழில்நுட்பவியல் பாடங்களும், விருப்பத் தெரிவுப் பாடங்களும் அடங்கும். இந்தக் கட்டத்தில் பாடசாலையை விட்டு விலகும் மாணவர்களுக்கு சாதாரணதர சான்றிதழுடன் மாணவர் பதிவட்டை ஒன்றும் வழங்கப்படும்.

★ நான்காவது கட்டத்தில் பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு வேண்டிய பாடத்திட்டங்கள் அமுல் செய்யப்படும். இதன்படி பல்கலைக்கழக நுழைவுக்கான சான்றிதழ்களைப் பெறுவதற்குத் தேவையான பாடங்கள் மூன்றாகும். அத்துடன் நான்காவது விருப்பத் தெரிவுப் பாடத்திட்டத்தை எடுக்கக் கூடிய சந்தர்ப்பமும் மாணவர்களுக்கு வழங்கப்படும். இவர்களுக்கான புதியபாடத்திட்ட முறை ஒன்றும் அமைக்கப்படுவதுடன் தொடர்பு கொள்ளல், கிரகித்தல் என்பனவற்றிற்கு உதவியாக ஆங்கில மொழிப்பாடத்திட்டம் ஒன்றும் அமுல் செய்யப்படும். கலைப் பிரிவு மாணவர்களுக்கு விஞ்ஞான பாடமும் விஞ்ஞானத்துறை மாணவர்களுக்கு முகாமைப் பாடமும் விருப்பத் தேர்வுகளாகும். கணிதத்துறை சார்ந்த மாணவர்களுக்கு ஏனைய துறை சார்ந்த பாடங்கள் விருப்பத் தேர்வுகளாக அமையும். உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் மூலமும், உளச்சார்பு பரீட்சை ஒன்றின் மூலமும் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். உயர்தரத்திற்கான 3 பாடங்களுக்கும் தோற்றும் அதேசமயம் உளச்சார்புபரீட்சைக்குத் தோற்ற மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும். இதற்கு உதவியாக உளச்சார்புப் பரீட்சைப் பிரிவொன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் உடனடியாக நியமிக்கப்படும்.

இந்தப் புதிய நடைமுறை இந்த ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் உயர்தர வகுப்புக்களில் சேர்ந்து கற்கவுள்ள மாணவர்களுக்கு முதன் முதலாக அமுல் செய்யப்படும். 1999 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் இந்தப் புதிய அமைப்பிலானபரீட்சைக்குத்தோற்ற வேண்டும்.

பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்டக் கோட்டா முறை தொடர்ந்து அமுல் செய்யப்படும்.

(இ-4)

# சிவராத்திரி விழா

கொழும்புத்துறை, மார்ச்6

யாழ். வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் 43 ஆவது ஆண்டு விழாவும், சிவராத்திரி விழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் தலைவர் திரு.இ. விஜயரட்ணம் தலைமையில் நடைபெறும்.

கழகத்தினால் நடத்தப்பட்ட சைவசமய அறிவுப் பரீட்சையில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

(ஐ-30)

# நாலந்தாவின் பெயரைத் தனது குழந்தைக்கு வைத்த எம். பி.

சொழும்பு, மார்ச் 6

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் இளம் நாடாளுமன்ற உறுப்பினரான டயஸ் அழகப்பெருமா தமக்குப் பிறந்த குழந்தைக்கு 'நாலந்தா' எனப் பெயரிட்டுள்ளார்.

குழந்தை பிறந்த பின்னர் குழந்தையையும் தாயாரையும் கொழும்பிலிருந்து நாலந்தா எல்லாவெலவே காரில் இரத்தினபுரியில் கொண்டு சென்று விட்டார் என்றும் —

அதற்கு இரு நாள்களின் பின்னர் அவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் —

அதற்காக அவரின் பெயரைத் தமது குழந்தைக்குச் சூட்டியதாகவும் — அழகப்பெருமா தெரிவித்துள்ளார்.

(இ-3-150)

# ஏமாற்றி பணம் பறிக்கும் பேர் வழிகள் நடமாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

வீடுகளில் தனியே இருக்கும் பெண்களைத் தந்திரமாக ஏமாற்றிப் பணம் பறிக்கும் பேர் வழிகளின் நடமாட்டம் குறித்து தகவல்கள் தெரியவந்துள்ளன.

யாழ். நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பகல் வேளையில் இவ்வாறான சம்பவங்கள் சில இடம் பெற்றிருக்கின்றன.

கொக்குவில் கிழக்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குச் சென்ற நபர் ஒருவர் அங்கு தனித்திருந்த பெண்ணிடம் தந்திரமாகப் பேசியுள்ளார்.

உங்கள் கணவர் கட்டிலொன்றைச் செய்ய என்னிடம் ஓடர் தந்தார். அந்தக் கட்டில் பின்னால் வண்டியில் வருகிறது. அதற்கான பணம் ரூபா மூவாயிரத்தைத் தாருங்கள் என்று அந்த நபர் பெண்ணிடம் கேட்டுள்ளார்.

ஆனால் அவ்வாறு கட்டில் எதுவும் செய்ய முடிவு எடுக்கவில்லை என்பதைத் தெரிந்திருந்த பிரஸ்தாபப் பெண் கட்டில் எமக்குத் தேவையில்லை என்று கூறிவிட்டு வீட்டுக்குள் சென்றுவிட்டார்.

சிறிது நேரத்தின் பின் வெளியே வந்து பார்த்தபோது அந்த நபரைக் காணவில்லை. அவர் அங்கிருந்து நழுவிச் சென்று மறைந்துள்ளார்.

இது போன்ற வேறு சில சம்பவங்களும் நகரப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. (ஐ-4)

# மாகாண அமைச்சரின் வீட்டில் பொலீஸார் தேடுதல் நடத்தினர்

கொழும்பு, மார்ச் 6

வடமத்திய மாகாணசபை விவசாய அமைச்சர் டபிள்யூ. பி. ஏக்கநாயக்கா வீட்டில் பொலீஸார் தேடுதல் நடத்தி உள்ளனர்.

மேலிட உத்தரவின் பேரில் இத்தேடுதல் நடத்தப்பட்டதாக அமைச்சரிடம் பொலீஸார் தெரிவித்தனர்.

தம்மிடம் இருந்த ஆயுதங்களை ஏற்கனவே கையளித்துவிட்டதாக பொலீஸாரிடம் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

பொலீஸாரின் தேடுதலில் ஆயுதங்கள் எதுவும் அகப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (இ- 3-150)

# நாவற்குழியில் கைதான 23 பேரும் எங்கே?

## ஜனாதிபதியிடம் கேள்வி

கொழும்பு, மார்ச் 6

''தச்சன்தோப்பு — நாவற்குழிப் பகுதியில் அமைந்துள்ள பிரதேச சபை உப அலுவலகப் பகுதியில் கடந்த ஜூலை 19 ஆம் திகதி தேடுதல் நடவடிக்கையின் போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 23 தமிழ் இளைஞர்களுக்கும் என்ன நடந்தது? அவர்கள் தடுத்து வைக்கப் பட்டுள்ளார்களா? இல்லையேல் கைது செய்யப்பட்டபின்னர் காணாமற் போய்விட்டனரா?''

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பியான ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இவ்வாறு கேள்வி எழுப்பி உள்ளார்.

கைது செய்யப்பட்டு சுமார் ஏழு மாதங்களாகியும் இவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்று அவர்களது பெற்றோருக்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை. இது பெற்றோர், உறவினர் மத்தியில் பல சந்தேகக் கேள்விகளை எழுப்பியுள்ளது. உண்மையில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்களா? அல்லது கைது செய்யப்பட்ட பின் காணாமற் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்களா? — இதனைத் தெளிவுபடுத்த வேண்டும்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஒருவர் கைது செய்யப்படும் பட்சத்தில் கைது சம்பந்தமாக உறவினரிடம் உடனடியாகப் பற்றுச்சீட்டு வழங்கப்படல்வேண்டும் என்றும் —

அவர் கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்தில் அருகிலுள்ள பொலீஸ் நிலையத்தில் கையளிக்கப்பட வேண்டும் என்றும் —

அதேவேளை 48 மணித்தியாலத்தில் அவர் எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது பற்றி பெற்றோருக்கோ அல்லது உறவினருக்கோ அறிவிக்கப்படல் வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளீர்கள். ஆனால் இந்த நடைமுறைகள் வடக்கு — கிழக்குப் பகுதியில் முக்கியமாக யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் கைதுகளின் போது கடைப்பிடிக்கப்படுவதில்லை — இவ்வாறு அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-5)

# நாளை

**மாசி 24**

**வெள்ளிக்கிழமை**

திதி: திரயோதசி நண்பகல் 12-26 வரை.

நட்சத்திரம்: அவிட்டம் பின்இரவு 1.18 வரை.

சிவராத்திரி விரதம்

ராகுகாலம்: 10.55-12.25

சுபநேரம்: 6.25-7.55

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப் படி)

# டில்லியில் நிலநடுக்கம்

புதுடில்லியில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இலேசான நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டது. உடைமைகளுக்கோ உயிர்களுக்கோ இதனால் பாதிப்புகள் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

# நோயாளர் கப்பல் சேவை

மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு செல்லும் நோயாளர்களை ஏற்றிச்செல்லும் கப்பல் நேற்றுப் பிற்பகல் 1 மணிக்கு காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.

நோயாளர்கள் யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியுடன் பஸ்களில் காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (இ-15)

# உதயன்

## தேர்தல் நெருக்கடி

தென்னிலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் இரண்டு வாரங்களே உள்ளன. நடைபெறப் போவது பொதுத்தேர்தலோ என்று எண்ணும் அளவுக்கு அங்கு தேர்தல் களம் சூடேறி வருகிறது.

ஜனநாயகத்தின் முத்திரை என்று கருதப்படும் தேர்தல் அங்கு வன்முறைகள் மலிந்த ஒன்றாக மாறியுள்ளது. பிரதான கட்சிகள் சுடுகலன்களையே தமக்கு வாக்கும், செல்வாக்கும் தேடும் ஆயுதங்களாகப் பாவிக்க முனைவதாகத் தெரிகிறது.

வன்செயல் தேர்தலுக்கு இடமளிக்காமல், ஜனநாயக ரீதியான தேர்தலை நடத்துவதற்கு அரசியல் தலைவர்களுக்கு — அரசியல்வாதிகளுக்கு — வழங்கப்பட்ட ஆயுதங்களைக் களைவது என்று முடிவாகியது. ஆனால் அது பூரண வெற்றியாக அமைந்ததாக உத்தியோகபூர்வ தகவல் எதுவும் இன்னும் இல்லை. அது கண்ணாமூச்சி விளையாட்டோ என்று சந்தேகப்பட வேண்டியுள்ளது.

வன்செயல்களில் ஈடுபடுத்துவதற்காக இரண்டு பக்கங்களும் தமக்கென விசேட இராணுவக் குழுக்களை வைத்திருக்கின்றன என்ற தகவல்களும் கசிந்து கொண்டிருக்கின்றன.

அரசியல் கொலைகள், அரசியல்காடைத்தனங்கள், ஆயுதங்கள், ஆயுதக் களைவு, தேர்தல் வன்செயல்கள் என்று ஒரே குழப்பமாகி உள்ளது. இந்த நெருக்கடிக்கு மறுமுனையில்......

அரசாங்க சேவையில் உள்ள பல தரப்பினரும் தொழிற்சங்க நடவடிக்கை என்ற ஜனநாயக ஆயுதத்தை ஏந்தி இன்னொரு வகைப் பாதிப்பையும் நெருக்கடியையும் உருவாக்கி வருகின்றனர்.

வைத்தியர்கள், மருத்துவ துணைச் சேவைகளைச் சேர்ந்த ஆளணியினர், தபாற் பகுதியினர், துறைமுக ஊழியர் என்று மாறி தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்; ஈடுபடப் போவதாக அறிவிக்கின்றனர்.

தமது கோரிக்கைகள் வழங்கப்படவில்லை என்று கூறியும், தங்களுக்கு நியாயம் வழங்க அரசு மறுத்துவிட்டது என்று காரணம் தெரிவித்தும் இவர்கள் வேலை நிறுத்தம், அடையாள வேலை நிறுத்தம், மேலதிக நேர வேலை செய்யாமை ஆகிய ஜனநாயக ஆயுதங்களால் அரசைத் தாக்குகின்றனர்!

தேர்தல் காலம் என்பதால் தமது போராட்டம் வெற்றி தரும் என்ற எண்ணமோ என்னவோ...! காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளவோ!

உள்ளூராட்சித் தேர்தல் நிச்சயமாக அரசாங்கத்தை ''சிப்பிலி'' ஆட்டுகிறது. ஒரு முனையில் வன்செயல்கள் மறு முனையில் ஜனநாயக ரீதியான தொழிற்சங்க நடவடிக்கை என்று அரசைத் துளைத்து எடுக்கின்றன!

இந்த நெருக்கடியில், தேர்தல் என்ற ஆப்பை இழுத்த குரங்கின் நிலையில், அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வை மறந்துவிட்டதாகவே தெரிகிறது. தேர்தல் முடிவுகள் சில வேளைகளில் பிந்திய விடயத்தை முற்றாக மறக்கச் செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளைக்குற்றம் தொடர்பாக விமானப்படை அதிகாரி கைது!

கொழும்பு, மார்ச் 6

மட்டக்களப்பு பெருந்தெருக்கள் அதிகார சபைக்குச் சொந்தமான களஞ்சியத்திலிருந்து 25 லட்சம் ரூபா பெறுமதியான உழவு இயந்திரங்களையும் படகுகளுக்குப் பொருத்தும் இயந்திரங்களையும் கொள்ளையடித்தது தொடர்பாகமா விமானப்படையின் முன்னாள் ஸ்குவாட்ரன் லீடர் விமல் கருணாரத்தின குற்றப்புலனாய்வுப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை இம்மாதம் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மாளிகா கந்தை மாஜிஸ்ரேட் உத்தரவிட்டார்.

1994 ஆம் ஆண்டு மட்டக்களப்பு விமானப்படை கட்டளை அதிகாரியாக இருந்த விமல் கருணாரத்தினவும், விமானப்படை சிப்பாய்கள் 11 பேரும் இந்தக் கொள்ளையை மேற்கொண்டனர் எனவும் —

கொள்ளையிட்ட பொருள்களைக் கொழும்புக்குக் கொண்டு சென்று விற்றனர் எனவும்தெரிவிக்கப்படுகிறது. இவர்களால் விற்கப்பட்ட பல கொள்ளைப் பொருள்கள் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளால் இக்கொள்ளை மேற்கொள்ளப்பட்டது என தற்போது கைதாகியுள்ள விமானப்படை அதிகாரி — அப்போது 1994 இல் விமானப்படைத் தலைமையகத்திற்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தாராம்.

(உ- 10)

## பேராதனைப் பல்கலை வெளிவாரி
# கலைப் பட்டதாரிப் பரீட்சை இம் முறை இரு பிரிவுகளாக

கொழும்பு, மார்ச் 6

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வெளிவாரி கலைப் பட்டதாரி மாணவர்களுக்கான முதலாவது பரீட்சை இம்முறை இரண்டு பிரிவுகளாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது,

இம்முறை பாடசாலை விடுமுறை குறுகிய காலத்தில் அமைவதால் இந்த நடைமுறையை மேற்கொள்வதாக பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைப் பகுதி பிரதிப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி பரீட்சையின் முதலாவது பகுதி ஏப்பிரல் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 11 ஆம் திகதி வரை கொழும்பிலும், கண்டியிலும் உள்ள பரீட்சை மத்திய நிலையங்களில் மட்டும் நடைபெறும்.

இரண்டாம் பிரிவு பரீட்சை ஏப்ரல் 16 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை மாத்தறை, கொழும்பு, குருநாகல், கண்டி, பண்டாரவளை ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும்.

மார்ச் 7 ஆம் திகதிக்குப் பின்னர் இப்பரீட்சைதொடர்பாக விண்ணப்பதாரர்கள் பதிவு செய்யப்பட மாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

(இ-4)

# கொழும்பில் அதிபர்கள் கருத்தரங்கு

குருநகர், மார்ச் 6

புதிய கல்விச் சீர்திருத்தமும், மீள் கட்டமைப்பும் தொடர்பான அதிபர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

தேசிய பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்களை இதில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் தேசிய பாடசாலை அதிபர்களை கடித மூலம் கேட்டுள்ளார்.

(ஐ-51)

# பதவியாவில் தாக்குதல்; 3படையினர் உயிரிழப்பு

அனுராதபுரம் மாவட்டம் பதவியா பொலீஸ் காவலரண் ஒன்றின் மீது நேற்று முன்தினம் காலை 6. 30 மணியளவில் புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு ஊர்காவல் படையினரும் ஒரு பொலீஸாரும் கொல்லப்பட்டனர் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவத்தில் காயமடைந்த மற்றொரு ஊர்காவல் படையைச் சேர்ந்தவர் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்,

தாக்குதலின்போது கொல்லப்பட்ட பொலீஸாரின் கழுத்து துண்டாடப்பட்டிருந்தது என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் கூறினார். இப்பகுதியில் பொலீஸாரும், இராணுவத்தினரும் கூட்டுத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

(இ-4)

# தவறுதலாகத் துப்பாக்கி வெடித்து இளவாலையில் சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம்: மார்ச் 6

தற்செயலாக இடம்பெற்ற துப்பாக்கிவெடிச் சம்பவத்தின் போது மரணமானதாக இராணுவச் சிப்பாய் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மாலை யாழ். ஆஸ்பத்திரியில் இளவாலை இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்டது.

இளவாலையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஆர். எம். ஹேமந்தா (வயது 20) என்ற இராணுவச் சிப்பாயே உயிரிழந்தவராவார்.

(இ-15)

# போக்குவரத்து நெருக்கடியால் நகரில் வீதி விபத்துக்கள்
## இரு மாணவர்கள் காயம்

போக்குவரத்து நெருக்கடி காரணமாக யாழ். நகரில் வீதி விபத்துக்கள் அதிகரிக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் வேம்படி வீதிப்பகுதிகளில் நேற்றும் நேற்று முன்தினமும் இடம்பெற்ற இரண்டு வீதி விபத்துக்களில் இரு மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

வேம்படி வீதியில் நேற்று இடம்பெற்ற மினிபஸ் — சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்றவரும், யாழ். மத்திய கல்லூரி பத்தாம் ஆண்டு மாணவருமான குருநகரைச் சேர்ந்த அழகக்கோன் ராஜக்கோன் (வயது 15) என்பவர் காயமடைந்தார். இவருடைய சைக்கிளும் பலத்த சேதமடைந்தது.

யாழ்ப்பாணம் மடம் வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சைக்கிள் விபத்தில் யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மட பாடசாலை மாணவியான ரி. நவீனா (வயது 18) காயமடைந்தார்.

இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

(இ-15)

# தொற்று நோய்கள்

வடமராட்சி, மார்ச் 6

குடாநாட்டில் நிலவும் கடும் வெப்பத்தினால் பொக்குளிப்பான், கூகைக்கட்டு போன்ற நோய்கள் பரவி வருகின்றன. (இ-173)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்)

கொழும்பில் இருந்து வெளிவரும் 'மிட்வீக் மிரர்' தகவல் வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்த முடிவை ஈ. பி. டி. பி. வரவேற்றுள்ளது.

''வடக்கு — கிழக்குக்கு இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துமாறு சில ஆண்டுகளாக அரசாங்கத்தைக் கோரி வருகிறோம். இதுவரை எதுவுமே நடந்ததாகத் தெரியவில்லை'' என்று ஈ. பி. டி. பி. யின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட எம்பியுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார் என்று 'மிட் வீக் மிரர்' மேலும் தெரிவிக்கிறது.

(இ-3-150)

## நிறுத்தப்...

(முதலாம் பக்கத் தொடர்)

கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளுக்கு தரைப்பாதை இருப்பினும், எம். ஐ. 17 ரகஹெலிகளே பொருள்களையும், துருப்புக்களையும் எடுத்துச் சென்று விநியோகித்து வருகின்றன.

ஹெலிகள் இரண்டும் மோதிசேதம் அடைந்ததால் இந்தப் பணிகளுக்காக கடற்படையினர் மற்றும் ''லயன்எயர்'' தனியார் விமான சேவையினர் ஆகியோரைக் கூடுதல் சேவை நடத்துமாறு கேட்கப்பட்டுள்ளது என்று அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

(இ-150-3

## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

7 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

கப்பலில் பயணம் செய்ய வருபவர்கள் தேசிய அடையாள அட்டை அல்லது விசேடஅடையாள அட்டை ஏதாவது ஒன்றை எடுத்துவர வேண்டும் என்றும் —

மின்சார உபகரணங்கள் எதையும் பயணத்தின் போது எடுத்துச்செல்ல முடியாது என்றும் — யாழ். [illegible] வாக அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-3)

# நுவரெலியா குண்டுவெடிப்பு; இதுவரை அறுவர் கைதாகினர்

கொழும்பு, மார்ச் 6

நுவரெலியாவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தங்கியிருந்த அவரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்துக்கு வெளியே கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்புத் தொடர்பாக இதுவரை ஆறுபேர் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட கல்லூரி மாணவனுக்கு ஜனாதிபதியின் வாசஸ்தலம் நன்கு பரிச்சயமானது என குண்டுவெடிப்பு தொடர்பாக விசாரணை செய்துவரும் நுவரெலியாப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

கொல்லப்பட்ட மாணவனின் தந்தை கதிரவேல் ஆறுமுகம் ஜனாதிபதியின் வாசஸ்தலத்தில் நீண்ட காலமாகக் கடமையாற்றி வருகின்றார்.

இச்சம்பவத்தை அடுத்து கதிரவேல் ஆறுமுகம் அவரது இரு புதல்விகளான நிரஞ்சினி (20வயது), ஷகிலா (21 வயது) மற்றும் தேவகுமார் (26 வயது), முத்து பழனி தனராஜ் (16 வயது) கருப்பையா முத்து பழனி ஆகியோரே கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கும் ஜனாதிபதியின் வாசஸ்தலத்துக்கும் இடையே 500 மீற்றர் இடைவெளியே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட மாணவனின் சடலம் மரண விசாரணையின் பின்னர் அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சடலத்தை எரிக்கக்கூடாது என்றும் —

சடலம் புதைக்கப்பட வேண்டும் என்றும் — மரண விசாரணை அதிகாரி அவர்களுக்கு உத்தரவிட்டார்.

பற்றைக்குள் கிடந்த ஒரு பார்சலைஎடுத்த சமயம் அது வெடித்ததாக மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

மேல் விசாரணை இம்மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது

(இ- 3- 150)

# 2 சடலங்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

சங்கானையிலும், புத்தூரிலும் இடம்பெற்ற இரு வெவ்வேறு சம்பவங்களில் இறந்ததாக இருவரின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

சங்கானையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இறந்ததாக ஒருவரின் சடலம் இராணுவத்தினரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சங்கானையைச் சேர்ந்த பொன்னுத்துரை துரைரட்ணம் (வயது 54) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையின் சடலமே அது எனத் தெரிவிக்கப்பட்டது.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட இச்சடலம் நேற்று நடைபெற்ற மரண விசாரணையின் பின் அவரது மனைவியிடம் கையளிக்கப்பட்டது.

புத்தூர் மேற்கில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்ததாக இனந்தெரியாத ஒருவரின் சடலம் நேற்று கோப்பாய்ப் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சடலத்தின் மார்புப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கான காயம் காணப்பட்டது.

(இ-15)

# நூலகர் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 6

இலங்கை நூலகச் சங்கம் நடத்தும் நூலகவியல் தகவல் விஞ்ஞானப்பரீட்சை தொடர்பாக பரீட்சார்த்திகளின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

நூலகவியல் தகவல் விஞ்ஞானப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்தாதவர்களையும், பரீட்சைக்குப் புதிதாகத் தோற்றவுள்ளோரையும் தமது விவரங்களை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். பொதுசன நூலக பிரதம நூலகரிடம் நல்லூர் கிளை நூலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-15)

## ரெலோவை...

(முதலாம் பக்கத் தொடர்)

அறிவிப்பதாகக் கூறினோமே தவிர, ரெலோவை ஆதரிப்பதாக கூட்டணி முடிவெடுத்திருப்பதாக நாம் எச்சந்தர்ப்பத்திலும் கூறவில்லை. இந்த விடயம் குறித்து நாம் எத்தீர்மானமும் எடுக்கவில்லை.''

''கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் — கே. கணேசலிங்கம் தலைமையிலான — சுயேச்சைக் குழுவை ஆதரிப்பதாக கூட்டணி முன்னர் அறிவித்திருந்தது என்ற சாரப்பட வெளியான செய்திகளும் தவறானவை. அத்தகைய முடிவு எதனையும் நாம் எடுக்கவில்லை'' — இவ்வாறு திரு. சிவசிதம்பரம் உதயனுக்குத் தெரிவித்தார். (உ)

## மக்கள் வங்கிப்...

(முதலாம் பக்கத் தொடர்)

புலிகளே இத்தாக்குதலை நடத்தியதாகவும் புலிகள் கிரனேட் ஒன்றையும் அங்கு வீசியதாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலீஸ் உத்தியோகத்தர் சுடப்பட்ட போது வங்கி ஊழியர்கள் அச்சத்தால் பின் கதவால் ஓட்டம் பிடித்தனர். சிறிது நேரத்தில் அப்பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டது.

படையினரும் பொலீஸாரும் அங்கு வந்து தேடுதல் நடத்தினர்.

வாழைச்சேனை மக்கள் வங்கிக்குச் சிறிது தூரத்திலேயே படையினரின் மீன் பிடித் துறைமுகக் காவலரண் உள்ளது.

படையினரினதும் பொலீஸாரினதும் கட்டுப்பாட்டில் உள்ள இந்தப் பகுதிக்குள் பட்டப் பகலில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை, வாழைச்சேனை, பேத்தாளைப் பொலீஸ் காவலரண் மீது திங்களன்று மாலை புலிகளினால் ஆர். பி. ஜி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (இ-4)

## குமாரின்...

(முதலாம் பக்கத் தொடர்)

முடியாது. ஆனால் என்ன காரணத்திற்காகப் புரிந்தார்கள் என ஒருவாறு ஊகிக்க முடியும்'' எனவும் அவர் கூறினார்.

கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் தெரிவின் போது போட்டியிட்ட ஒருவரின் தகுதிபற்றித் தான் கூட்டத்தில் கடுமையாக விமர்சித்ததாகவும் அதன் பிரதிபலனாக கோயில் உடைக்கப்பட்டிருக்கலாம் எனவும் அவர் கூறினார். (இ-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/1 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06 - 03 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org